RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21431

# பாணர்களின் வாழ்வியல் சிறப்பு

சி. அமுதா [அ]

[அ] தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-613005, இந்தியா

# Special features of the life of the Panar

S. Amutha [a, *]

[a] Department of Tamil, Rajah Serfoji Government College, Thanjavur-613005, India.

* Corresponding Author: drsatamil@gmail.com

Received: 20-05-2021
Revised: 27-09-2021
Accepted: 04-10-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

The Sangam books of the Eight anthologies and Ten Idylls contain the books of the Aatrupadai. Sangam literature is considered to be classical literature in tamil language. The Sangam poets have embodied all their life experiences in the songs. The Sangam hymns are the literature that records the experiences of man. Though the life that man lives on earth is a very short life, the difficulties and difficulties that man faces in his life are numerous. In later years, the books of the Aatrupadai were given as chitrilakyams in Tamil and prabandhas in Sanskrit. Thus they made it one of the types of songs. Counseling means guiding. Poets used to go to the philanthropists to sing songs and get prizes to alleviate their poverty. There are four kinds of groups viz., Viraliyar, Panar, Kootha and Porunar. Within these four categories, the Aatrupadai consists in the way in which one person leads the other to receive a gift. External song which is composed of hymns, speaks of the leader's fame, gifts and heroism. If the internalism describes the life of the leader and the leader, the exegesis conveys a community by telling the history of the king. Thus, the life of the Panar is shaped by the songs of the Panar.

**Keywords:** Sangam literature, Viraliyar, Panar, Porunar

## முன்னுரை

சங்க கால நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் ஆற்றுப்படை நூல்கள் உள்ளன. சங்க இலக்கியம் தமிழ் மொழியில் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது. சங்கப் புலவர்கள் தங்கள் வாழ்வியல் அனுபவங்களை எல்லாம் பாடல்களில் பொதிந்து வைத்துள்ளனர். சங்கப்புறப் பாடல்கள் மனிதனின் அனுபவங்களைப் பதிவாக்கும் இலக்கியமாக உள்ளது. மனிதன் பூமியில் வாழும் வாழ்க்கை மிக சிறிய வாழ்க்கையாக இருந்தாலும் மனிதன் தன் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களும் இன்னல்களும் ஏராளம்.

பிற்காலத்தில் ஆற்றுப்படை நூல்களைத் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்றும் வடமொழியில் பிரபந்தங்கள் என்றும் வழங்கலாயினர். இதனால் பாட்டியல் வகைகளுள் ஒன்றாக்கினர். ஆற்றுப்படுத்துதல் என்பது வழிப்படுத்துதல் என்னும் பொருள் உடையது. புலவர்கள் தம் வறுமையைப் போக்க வள்ளல்களிடம் சென்று பாடல்கள் பாடி பரிசுகள் பெறுவது வழக்கம். இதில் விறலியர், பாணர், கூத்தர், பொருநர் என நால்வகைப் பிரிவினர் உள்ளனர். இந்த நால்வகைப் பிரிவினுள் ஒருவன் பரிசு பெற செல்லும் இன்னொருவனை வழிப்படுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படையாகும். புறப்பாக்களாக அமையும் இப்பாடலில் தலைவனின் புகழ், கொடை, வீரம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துக் கூறும் விதமாக அமைந்துள்ளது. தலைவன், தலைவி வாழ்வியலை அகவிலக்கியம் எடுத்துரைத்தால் புறவிலக்கியங்கள் மன்னரின் வரலாற்றைச் சொல்வதின் மூலம் ஒரு சமூதயத்தை

எடுத்துரைத்து விடுகிறது (Sellam, 2002). அவ்வகையில் பாணர்களின் பாடல்களின் மூலம் பாணர்களின் வாழ்வியல் அமைந்துள்ளது.

உலக இலக்கியங்களில் மிகவும் பழமையும் சிறப்பும் பெற்று விளங்குவது தமிழ் இலக்கியம் ஆகும். அத்தகைய சிறப்பு மிக்கத் தமிழ் இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் என்ற வரிசையில் காலந்தோறும் நீண்டு கொண்டே இருக்கின்றன. அவற்றுள் சங்க இலக்கிய நூல்களானது பதினெண் மேற்கணக்கு என்ற வரிசையில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இருபெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. எட்டுத்தொகையில் எட்டு நூல்களும், பத்துப்பாட்டில் பத்துப் பாட்டுகளும் இடம்பெற்றுள்ளன. பத்துப்பாட்டுள் ஐந்து பாடல்கள் ஆற்றுப்படையைப் பற்றியவையாக ஆற்றுப்படையின் இலக்கணம் பெற்று சிறப்பிடம் பெற்றுள்ளன. எட்டுத்தொகையில் இடம்பெறும் ஆற்றுப்படைப் பாடல்கள் பற்றியும் பத்துப்பாட்டின் ஆற்றுப்படைப் பாடல்களுள் சிறுபாணாற்றுப்படையின் சிறப்புகளையும் பாடுபொருட் கூறுகளையும் பற்றி ஆராயப்படுகிறது.

## பாணரின் வாழ்வியல்

இலக்கணச் செம்மையும் வளமும் கொண்ட தமிழ்மொழியின் தனிப்பெரும் சொத்துக்களாக திகழ்வன இலக்கியங்களாகும். பாட்டும் தொகையும் என்று பாகுபடுத்தப்பட்டுள்ள சங்க இலக்கியங்களின் மூலம் பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை அறியமுடிகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களில் பல்வேறு இனமக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் அம்மக்களின் பல்வேறு தொழில்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், வழிபாட்டு முறைகள் குறித்த செய்திகளைத் தமக்கு உணர்த்தி கூறுவது சங்க இலக்கியங்களாகும்.

இவ்வகை நில மக்களாலும் வள்ளல்களாலும், மன்னர்களாலும் ஆதரித்து அரவணைக்கப்பட்டு வாழ்ந்தவர்களாகப் பாணர்கள் அறியப்படுகின்றனர். இவ்வாறு மன்னர்களாலும் மக்களாலும் போற்றிக் காக்கப்பட்டப் பாணர்களின் வாழ்வியலைப் பதிவுசெய்கிறது.

## பாணர்கள்

பண்டையக் காலத்தில் இசைப்பாடுதலையே தமது முதன்மை தொழிலாக மேற்கொண்டு வாழ்ந்தவர்கள் பாணர்கள். பாணர்கள் (பண் - இசை) பண்ணுக்குரியவராக இருந்த காரணத்தால் அப்பெயர் பெற்றிருக்கலாம். பாணர்கள் பற்றிய செய்திகள் பல பழந்தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளன. 'பாணன் - என்றால் காட்டாமணக்கு, கல்வியின் மூத்தமகன், இவன் ஆயிரங்கையுடையவன், அநீகன் புத்திரன்' என்று எல்லாம் அகராதி பொருள் தருகின்றது. பாணர் இனம் புலவர்கள் வளர்த்த இயற்றமிழுக்கு அப்பாலான இசைக்கூத்துத் தழிழை வளர்த்துப் போற்றிய குடியினர் பாணர்குடி. பாணரின் வாழ்வோடு ஒன்றியே இசையும், கூத்தும் வளர்த்தன என்பதை இலக்கியங்கள் வழி அறியலாம்.

'பாணர் என்பார் பாடுவர் என்ற அளவில்

பொருள் சொல்லகூடிய சுருங்கிய வல்லார்

அல்லர் பாடுவாரும் ஆடுவாரும் கருவிசைப் பாடும்

கருவி செய்வாரும் அவர்தம் பெண்டீரும்

கூடிய ஒரு பெருந்தொகுதியினரே பாணர் என்பவர்'

பாணர்கள் பல வகையான இசைக் கருவிகளை முழங்கிக் கொண்டு ஊர் ஊராக நாடோடிகள் போன்று செல்வதுண்டு. இவர்களுக்குத் தனி இடம், ஊர், நாடு என எதுவும் கிடையாது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்ற மேற்கண்ட புறநானூற்றுப் பாடலுக்கேற்ப பாணர்கள் தாம் செல்லும் ஊர்களையே தமது ஊராகவும் குடிமக்களைத் தங்களது இனமக்களாகவும் கருதி வாழ்ந்து வந்துள்ளனர் (Avvai Duraisamy Pillai, 1968). பாணர்களின் முதன்மை இசைகருவி யாழாகும். பண் என்பது இசையைக் குறிக்கும். பாண என்பது யாழ், பண்ணாகிய இசையைத் தரும் பாண் கருவியை வாசிப்பதையே தொழிலாகக் கொண்ட பாணர்கள் யாழின் மூலம் இசை விருந்தளிப்பதில் மிக்க திறமை உடையவர்கள். பாணர்களில் ஆண்மகன்கள் பாணன், பாண்மகன் என்னும் பெயரால் அழைக்கப்பட்டனர்.

'பாணன் சூடிய பைம்பொற்றாமரை

நைவளம் பழுநிய நயந்தெரி பாலைக்

கைவல் பாண் மகன்'

என்ற புறநானூற்றுப் பாடல்களின் அறியமுடிகிறது (Avvai Duraisamy Pillai, 1968). பெண்கள், பாண்மகள், பாடினி, விறலி, பாணிச்சி என்று அழைக்கப்பட்டதை,

'முள்ளெயிற்றுப் பாண்மகள்'

'பாணன் சூடான் பாடினி யாணியாள்'

'சீல் வளைக்கைச் செய்வாய் விறலி'

என்ற பாடல் வரிகள் சான்று பகர்கின்றன (Manikam, 1999). பாணர் இன பெண்கள் இசையில் சிறந்து விளங்கியதை உணர்த்துகிறது. பாணர்கள் நாடோடிகளாக காடு, மலை என ஐந்து நிலங்கள் சுற்றித் திரிந்தார்கள் என்பதை,

'ஆனினங் கலித்த அதாபல கடந்து

மானினங் கலித்த மலையயி னொழிய

மீனினங் கலித்த துறைபல நீந்தி

உள்ளிவந்த வள்ளுயிர்ச் சீரியாழ்

சிதாஅர் உக்கை முதா அரிப்பாண'

என்ற புறநானுற்று பாடல்கள் புலப்படுத்துகிறது (Manikam, 1999).

## விறலி

விறலியர் இசைக்கருவிகளுடன் சென்று முதலில் கடவுளை வாழ்த்திப் பாட்டுப்பாடி பண்ணிசைக்கேற்ப ஆடுவர் என்பதையும்,

'துடிய பாண பாடுவல் விறலி'

'தலைவன் றாமரை மலைய விறலியர்

சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யனிய'

விறலியர்கள் உள்ளத்தில் உதிக்கும் குறிப்புகளை வெளிப்பட ஆடுவதில் வல்லவர்கள் என்பதால் பேரணிகலன்களைப் பரிசளித்து வந்தததையும் பாடல் வரிகளின் மூலம் அறியலாகின்றது. இலக்கண நூல்களில் விறலியரைச் சுட்டுவதை,

'திறல் வேந்தன் புகல்பாடும்

விறலியை ஆற்றுப் படுத்தன்று'

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழ்த் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறா அர்க்குஅறிவுறீஇச்

சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்'

புறப்பொருளும், தொல்காப்பிய புறத்திணையிலும் வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது (Kathir Murugu, 2011).

## யாழ்

யாழ் என்பதற்கு நரம்புகளால் யாக்கப்பட்டது என்பது பொருள். இசைக்கருவிகளில் முதன்மையானது யாழே ஆகும். பண்டைய காலத்தில் சீறியாழ், பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், மயில் யாழ், தும்பு யாழ், ஆதி யாழ், மருத்தவ யாழ், கீசக யாழ், தீந்தொடை யாழ் என பல யாழ் வகைகள் பயன்பாட்டில் இருந்துள்ளன என்பதை,

'பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன

வங்கோட்டுச் செறிந்த வழிழ்ந்துவீங்கு திவவிள்

;;;;;;;;;;;;;;;;;;;;;------------------------------------------------------

தமிழ்து பொதிந் திலிற்று மடங்குபுலி நரம்பிற்

படுதுறை முற்றிய பயன்றெறி கேள்விக்'

என்ற சிறுபாணாற்றுப்படைப் பாடலடிகள் யாழின் தன்மை புலப்படுத்துகிறது (Jagatrakshagan, 2017).

## பாணர் சமூகம்

சங்க காலத்தில் பாண் சமூகம் என்பதற்குள் பல்வேறு சமூக குழுக்கள் இருந்தன என்பதை,

'துடிய பாண பாடுவல் விறலி'

என்ற புறநானூற்றுப் பாடல் புலப்படுத்துகிறது (Avvai Duraisamy Pillai, 1968). பாண் சமூகத்தின் வேறுபாட்டை தொல்காப்பியத்தில்,

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்'

அறியமுடிகிறது (Thamizhannal, 2010). ஐந்திணை வாழ்வு முறைகள் நிலைபெற்றிருந்த காலத்தில் இருந்தே பாண் சமூகமும் இங்கே உருவாக்கம் பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

'துடியன் பாணன் பறையன் கடம்பனென்று

இந்நாள் கல்லது குடியுமில்லை'

'இசையுடன் பண்ணப்படுவது பண

பண்ணிசையுடன் பாடுபவர் பாணர்

பண்ணிசை பொருந்த ஆடுபவர் பொருநர்

பாடற் பொருளை மெய்படுத்திக் காட்டு

ஆடுபவர் விறலியர்

கதைப்பாட்டுடன் ஆடுபவர் கூத்தர்'

பல வகை பாண் சமூக மரபினர் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு சான்றாக விளங்குகின்றது. பாணரின் இசைக்கருவியாலும் பாடும் பாண்முறையிலும் பல்வேறு சமூகமாக காணப்பட்டனர் என்பதை அறியமுடிகிறது.

## பாணரின் வகை

பாணரில் இசைப்பாணர், யாழ்பாணர், மண்டைப்பாணர் எனப் முப்பிரிவினர் உள்ளனர்.

இசைப்பாணர்கள் - வாய்ப்பாட்டு இசைப்பவர்கள்

யாழ் பாணர்கள - நரம்புக்கருவி இசைப்பவர்கள்

மண்டைப்பாணர்கள் - தோற்கருவி இசைப்பவர்கள்

பண்ணிசைத் தொழிலால் இவர்கள் பாணர் எனப்பட்டனர். இக்கலையில் ஆண்மகனைப் போன்றே பெண்களும் இணையாக ஈடுப்பட்டிருந்தனர். ஆண்கள் பாடற்பாணர், அகலவன், அம்பணவர் என அழைக்கப்பட்டனர் என்பதை

'பாடும் பாணிற் பாங்குறச் சேர்த்து'

'பொன் வளர்ந்தன்ன புரியடங்கு நரம்பி

னின்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ

நைவளம் பழநிய நயந்தெரி பாலை

கைவல் பாண் மகன்'

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது. யாழ் பாணர் யாழேயன்றிக் குழலையும் இசைக்கருவிகயாகக் கொண்டு தம் கலைத் திறமையை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை,

'குழலினும் யாழினும் குரல்முத லேழும்

வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்

அரும்பெறன் மரபிற் பெரும்பாண் இருக்கை'

என்ற சிலப்பதிகார வரிகள் மூலம் அறியலாகிறது. பாணர்களின் வாழ்வில் யாழை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்ததை அறியமுடிகிறது. கலை வாழ்வில் சிறந்து விளங்ககூடியவர்கள் பழந்தமிழர் என்பதைப் புலப்படுத்துகிறது.

## மண்டைப் பாணர்

மண்டைப் பாணர்கள் தோற்கருவி இசைப்பவர்களாகக் கருதப்படுகிறார்கள். மண்டை என்பது சங்ககாலத்தில் இரவலர்கள் உணவு பெற்று உண்பதற்காக வைத்திருந்த ஓர் உணவு பாத்திரமாகும். பாணர்கள் மன்னரது அரண்மனைக்குச் சென்று அரசர்களைப் புகழ்ந்து பாடி முடித்தப்பின் அரசர்கள் கொடுக்கும் கள், சோறு போன்ற உணவுகளை இம்மண்டையில் பெற்று உண்டுள்ளனர் என்பதை,

'கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச்

பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை

மெழுகுமெல் லடையிற் கொழுநிலம் பெருப்ப

அலத்தற் வல்லன் வாழ்கவன் றாளே'

என்ற வரிகளின் உணர்த்துகிறது. பாணர்கள் மண்டையை உணவு பெறும் பாத்திரமாகப் பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது.

## பாணர்களின் தொழில்

பாணர்கள் தம் வாழ்க்கையை நடத்துவதற்கு மேற்கொண்ட தொழில்களில் பாட்டுப்பாடுதல், யாழ் வாசித்தல், மீன் பிடித்தல் போன்றவை மிகவும் குறிப்பிடத்தக்கவை. பாணர்கள் பாட்டுப் பாடுவதிலும் யாழ் இசைப்பதிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.

'கேட்டார் பிணிக்கும் தகைவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்'

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது. இனிமை பொருந்தப் பாடும் திறமை உடையவர்கள். யாழ் பாணரின் இசைக்கு யானையும் அடங்கி நடக்கும் என்பதை,

'காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்

யாழ்வரைத் தங்கி யாங்கு'

என்ற கலித்தொகை பாடல் வரிகள் உணர்த்துகின்றது. கட்டுத்தறியையே பெயர்த்தெடுத்துவிடும் ஆற்றலுடைய மத யானைப் பாகனது பேச்சைக் கேட்காமல் திரியும் யானையும் பாணரின் யாழ் இசைக் கேட்டு அடங்கிப் பணிய செய்யும் ஆற்றல் யாழ்பாணருக்கு உண்டு என்பதைப் புலப்படுத்துகிறது. பாணர்களிடம் வழிப்பறி செய்யும் கள்வர்கள் யாழ் இசைக் கேட்டு தன் களவுத் தொழிலை விட்டு நல்லவர்களாக மாறுவர் என்பதை,

'ஆறலைக் கள்வர் படைவிட அருளின

மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை'

பொருநராற்றுப்படை உரைப்பதை அறியமுடிகிறது. பாணர்கள் மீன் பிடி தொழிலாளியாகவும் இருந்துள்ளனர் என்பதை,

'பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்

---------------------------------------------------

பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை'

என்ற அடிகள் பாணர்கள் வலை கொண்டு மீன் பிடித்ததையும் பாணிச்சியர் வெளியே கொண்டு சென்று விற்று விலைக்கு நெல், பயறு முதலான தானியங்களை வாங்கி வந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இவையன்றி,

'சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை'

தையற் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதை இவ்வரி உணர்த்துகின்றது. தொல்காப்பியக் காலத்திற்கு முன்பிருந்தே பாணர்கள் தமிழகத்தில் நிலைத்த குடிகளாக தழைத்திருந்தனர். விறலி தூது சென்றதை,

'பாணன் கூத்தன் விறலி பரத்தை

-----------------------------------------

தொன்னெறி மரபிற் கற்பிற்குரியர்'

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

## அகத்துறையில் பாணர்கள்

பாணர்கள் பற்றிய அகப்பொருள் செய்திகள் அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, நற்றிணை, ஐந்திணை ஐம்பது முதலான அகப்பொருள் சம்பந்தமான நூல்களில் கூறப்பட்டுள்ளன. இல்லற வாழ்வில் தூதுவர்களாக விளங்கியதை,

'தோழி தாயே பார்ப்பான் பாங்கன்

பாணன் பாடினி யிளையர்; விருந்தினர்

கூத்தர் விறலிய ரறிவர் கண்டோர்

யாத்த சிறப்பின்; வாயில்க ளென்ப'

தொல்காப்பிய நூற்பா மூலம் அறியலாம். பாணர்கள் அகத்துறையில் தலைவனையும் தலைவியையும் ஊடல் நீக்கி கூடல் வகுக்கும் வாயில்களாக செயல்பட்டுள்ளனர். தலைவியிடம் தூது சென்ற ஒரு பாணன் பொய் கூறுவதால் ஊரில் உள்ள பாணர்கள் எல்லாம் பொய் உரைப்பதாக,

'ஒரு நின் பாணன் பொய்யன் ஆக

உள்ள பாணர் எல்லாம்

கள்வர் போல்வர் நீ

அகன்றிசினோர்க்கே'

குறுந்தொகை பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது. பாணர்கள் பழிப்பிற்குள்ளாகுவதை,

'புலையன் கல்லாவாய்ப் பாணன்'

என்ற வரி பாணரை 'புலையன்' என்று குறிப்பிடப்படுவதை அறியமுடிகிறது. ஐங்குறுநூற்றில் பாணனை 'கைவல் சீறியாழ்ப்பாண்' என்ற உரைப்பதை அறியமுடிகிறது.

## புறத்துறையில் பாணர்கள்

பாண்கள் முரசறை தொழிலைச் செய்து வந்ததை,

'திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்

பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்

செல்வச் சேனை வள்ளுவ முதுமன்'

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. அதிகாலைப் பொழுதில் மன்னர்களைத் துயிலெழுப்பும் பணியைப் பாணர்கள் செய்துள்ளனர் என்பதை,

'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்

சூதர் ஏந்திய துயிலெடை நிலையும்'

என்ற தொல்காப்பிய நூற்பா வாயிலாக அறியமுடிகிறது. மேலும், மன்னர்கள் போர்களம் செல்லும்போது பாண்களும் சென்று போர் நிகழ்வுகளைப் பாடலாக பாடி ஊக்கப்படுத்தியதை,

'வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்

கைவல் யாழ்பாணர் கடனிறுத் தன்று'

'உரவு களிற்றுப் புலாஅம் பாசறை

நிலவின் அன்ன வெள்வேல் பாடினி'

என்னும் பாடலடிகள் மூலம் அறியலாகின்றது.

## பாணர்களின் மேன்மை

கலைத்துறையில் ஈடுபட்டவர்களை வள்ளல்களும் மன்னர்களும் ஆதரித்து பாணர்களுக்கு சமுதாயத்தில் சிறப்பிடம் தந்துள்ளதை,

'ஈன்டி யெருவை யிறகுளரும் வெங்களத்து

வேண்டியாங் கொண்ட விறல்வேழம் வேண்டாள்

வளைகள் வயிரியம்பும் வாட்டாளை வேந்தே

விளைகட் பகர்வான் விலை'

இப்புறப்பொருள்வெண்பாமாலை புலப்படுத்துகிறது. ஒரு பொருளைப் பகிர்ந்து வழங்குவதில் முதன்மை இடம் கலைஞற்கே கொடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. பல துறைகளில் முற்றிய அறிவும், புலமையும், வாய்மையும் உடையவர்கள் பாணர்கள் என்பதை,

'துறைபல முற்றிய பைதீர் பாணர்'

'முதுவாய் இரவர்'

'கோடியர் தலைவ கொண்டது அறிஞ'

என்ற பாடல் வரிகள் புலப்படு;த்துகிறது.

## பக்தி இலக்கியங்களில் பாணர்கள்

அக்காலத்தில் பக்தி இலக்கியம் பரவ பாணர் சமூகத்தார் பெரும் பங்காற்றியுள்ளனர். பாணர் சமூகத்தைச் சார்ந்தவர் திருநீலகண்ட யாழ்பாணர், திருபாணாழ்வார் என பக்தி இலக்கியங்களில் வீறு கொண்டதை அறியமுடிகிறது. பாணர்களின் கையிலிருந்த யாழில் தெய்வம் உறைந்திருந்தது எனும் நம்பிக்கையைப் பாடல்கள் உணர்த்துகின்றன.

'இடனுடைப் பேர்யாழ் முறையுழிகழிப்ப

கடன்அறி மரபின் கைதொழூஉப் பழிச்சி

நின்நிலை தெரியா அளவை அந்நிலை'

கலையையும் சமுதாயத்தையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல கருதி தன் கடமைகளைச் செய்து வந்தனர் என்பதை பக்தி இலக்கியங்கள் மூலமாக அறியமுடிகிறது. பாணரின் வறுமை நிலையை,

'கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திhதரும்

புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண'

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றது. மேலும் பாணர்கள் வறுமை நிலையை,

'ஓல்குபசி உழந்த ஒடுங்குநண் மருங்குல்

வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த

குப்பை வேளை உப்பிலி வெந்ததை

----------------------------------------------

சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி

யாமவ ணின்றும் வருதும்......'

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது. வறுமையான சூழ்நிலையில் வறுமை போக்கிக் கொள்ள நல்லியக்கோடனிடம் செல்கின்றனர். பாணர்களின் வாழ்வு பெரிது போற்றதக்க நிலையில் அமைந்துள்ளதைச் சங்கப் பாடல்கள் முதலாக பல இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

## முடிவுரை

பண் என்பது இசையைக் குறிக்கும். பாண் என்பது யாழ், பண்ணாகிய இசையைத் தரும் பாண் கருவியை வாசிப்பதையே தொழிலாகக் கொண்ட பாணர்கள் யாழின் மூலம் இசை விருந்தளிப்பதில் மிக்க திறமை உடையவர்கள். பாணர் சமூகத்தைச் சார்ந்தவர் திருநீலகண்ட யாழ்பாணர், திருபாணாழ்வார் என பக்தி இலக்கியங்களில் வீறு கொண்டதை அறியப்பட்டுள்ளது. பாணர்களின்

கையிலிருந்த யாழில் தெய்வம் உறைந்திருந்தது எனும் நம்பிக்கை பாடல்கள் உணர்த்துகின்றன. இதன் பாணர்களின் பழங்கால நிலையை அவர்களின் வாழ்வியலை சிறப்பு போன்ற புலப்படுகிறது.

## References


Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Jagatrakshagan, S. (2017) Sirupanatrupadai, Azhwargal Aaivu Maiyam, Chennai

Kathir Murugu, (2011) Purapporul Venbamaalai, Gowra Publications, Chennai, India

Manikam, A. (1999) Purananuru, Varthaman Pathippagam, Chennai, India

Sellam, V.T. (2002) Tamilaga Varalarum Panpadum, Manivasakar Pathippagam, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.



**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License